Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

4

# லய வாத்தியங்களின் வளர்ச்சி

**இரா.தி.ஜெகதீசன்,**
**வயலின் ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, சிவகங்கை.**
rtjegatheesan78@gmail.com

**ஆய்வு சுருக்கம்:**

பண்டைய சங்ககாலம் தொட்டு நாம் பயன்படுத்தி வரும் லய வாத்திய கருவிகளின் இன்றைய வளர்ச்சி வரை காண்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தென்றல் வடிவும் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவும் மதன் வடிவும் – குன்றாத
வேயினிசை வடிவும் வேத வடிவங் காணில்
ஆய தாளம் காணலாம்.

என்ற பஞ்சமரபு பாடலின் கூற்றுப்படி தாளம் என்பது அடிமுடி காண முடியாத , கரை காண முடியாத ஒரு கடல் போன்றது.

இந்த தாளத்தை தன்னகத்தே கொண்டுள்ள லய வாத்தியங்களின் வளர்ச்சியினை இந்த கட்டுரையின் வாயிலாக காண்போம்.

**நமது உடலும், லயமும்:**

லயம் என்பது இசையை ஒரு முறையான அளவுக்கு உட்படுத்தி அந்த இசையை அழகுற மிளிரச் செய்கின்றது என்று பஞ்சமரபு நூலில் அரிவனார் கூறுகின்றார். லய வாத்தியங்களில் தாளத்தை இசைக்கும்போது நம்மையும் அறியாமல் நமது உடலும் மனமும் அந்த லய வாத்திய இசையின் கட்டுப்பாட்டுக்கு வந்து விடுகின்றது. நமது கைகளும் , தலையும் நமது கால்களும் லய வாத்தியங்களின் இசை நடைக்கேற்ப அசைவதை காணலாம்.

இசையும் லயமும் நம்மை வசப்படுத்துவதற்கு இசையை நன்கு கற்று இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இசையை நன்கு ரசிக்க தெரிந்திருந்தால் மட்டும் போதும்.

2. அடிப்படையாகவே நமது உடலானது லயத்தை அடிப்படையாக வைத்தே இயங்குகிறது என்று கூறினால் கூட அது மிகையாகாது. மிகச்சரியான இடைவெளியுடன் இயங்கும் இதயத்துடிப்பு , நாடித்துடிப்பு மற்றும் இரத்த நாளங்களில் இயங்கும் இரத்த ஓட்டம் போன்ற உடல் உறுப்புகளை உதாரணமாக கூறலாம். இந்த உடல் உறுப்புக்கள் மிகச்சரியான இடைவெளியில் இயங்காவிட்டால் நமது உடல் இயக்கமே மாறிவிடும். நாம் நடக்கும் போது கூட நமது கால்கள் இயற்கையாகவே ஒரு லய கட்டுப்பாட்டுடன் இயங்குவதை கவனித்தால் தெரியும். இப்படி இயற்கையாகவே நமது உடல் இசையுடனும், தாளக்கட்டுப்பாட்டுடனும் இயங்கும்போது நாம் லயத்தின் பால் வசமாவது ஒன்றும் ஆச்சரியமான விஷயம் அல்லவே.......

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**லய வாத்தியம் பற்றிய குறிப்புகள்:**

லய வாத்திய இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திலும் சிலப்பதிகாரம், பஞ்சமரபு போன்ற தமிழ் படைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்கீத ரத்னாகரத்தில் "அவனத வாத்ய குடபம் " (தாள வாத்ய குழுமம்- Percussion Ensemble) பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. லய வாத்தியக்கருவிகளை வுருவாக்குவதில் இருந்து வாசிக்கும் நுட்பங்கள் வரை நாட்டிய சாஸ்திரத்தில் வரையறுத்து குறிப்பிட்டுள்ளனர்.

**லய வாத்தியங்களின் வளர்ச்சி நிலை**

பண்டைய சிலப்பதிகாரம் காலம் தொட்டு இசைக்கப்பட்டு வரும் லய வாத்தியங்களின் வளர்ச்சி இன்று விண்ணோக்கி வளர்ச்சி அடைந்துள்ளது எனலாம்.

3. ஆதி கால மனிதன் முதன் முதலில் கண்டுபிடித்த தோல் கருவிகள் பரிணாம வளர்ச்சியடைந்து இன்று மிக பல பிரதானமான லய வாத்தியங்களாக பரிணாமம் அடைந்துள்ளது . 16 ஆம் ஆண்டின் தொடக்கம் வரை தாள இசை நடனத்தின் ஒரு பகுதியாக மட்டுமே இருந்துள்ளது. பிறகு சபாக்களில் இசைக்கச்சேரிகள் துவக்கம் மற்றும் லய வாத்தியங்களில் லய வல்லுனர்களின் பிரவேசம் போன்ற நிகழ்வுகள் லய வாத்திய கருவிகளில் ஒரு புதிய புரட்சியை உருவாக்கியது எனலாம். கர்நாடக சங்கீதத்திற்கே உரிய மிகச்சிறந்த தாள வாத்தியமாக விளங்குவது மிருதங்க லய வாத்தியம். வாய்ப்பாட்டு கச்சேரியானாலும் , கருவியிசை கச்சேரியானாலும் நாட்டிய இசை கச்சேரியானாலும் அதில் பிரதானமான தாள வாத்தியமாக இடம் பெறுவது மிருதங்கம். இதில் பாடுபவரின் இசைக்கு ஏற்ப வாசிப்பதாலும் தாள நுணுக்கங்களை திறமையாகவும் வெளிப்படுத்த முடியும். மேலும் நடனத்திற்கு மிருதங்கம் வாசிக்கும்போது ஆடுபவரின் கால் ஜதிகளுக்கு ஏற்ப நடன ஜதிகளை மிருதங்கத்தில் அப்படியே வாசிக்கும் சிறந்த தாள வாத்திய கருவியாக உள்ளது. இது குரலிசை கச்சேரிகளையும் நடன கச்சேரிகளையும் மிகவும் மிளிரச்செய்கிறது.

லய வாத்தியங்கள் சங்ககாலம் தொட்டே மக்களின் பல்வேறு நிகழ்வுகளில் பல வகைகளில் பயன்பட்டன. நகராவும் பேரிகையும் போர்க்களத்திலும், முழவும் மத்தளமும் சபாக்கள் மற்றும் திருமண நிகழ்வுகளில் இசைக்கப்பட்டன. பஞ்சமுக வாத்தியம் , முரசு,

4. உடுக்கை,தவண்டை ,பம்பை முதலான கருவிகள் ஆலய வழிபாட்டிற்க்கு ஆலயங்களில் இசைக்கப்பட்டன. குடமுழா , தமுக்கு, கிடுகட்டி, தாசரிப்பட்டை முதலான லய வாத்தியக் கருவிகள் கிராமிய நிகழ்வுகளில் இசைக்கப்பட்டது.

ஆலய வழிபாட்டில் இசைக்கப்பட்ட லய வாத்தியக்கருவிகள் இன்று இசை அரங்குகளிலும் , இசை ஒலிப்பதிவு கூடங்களிலும் இசைக்கப்படுகின்றன.

லய வாத்தியங்களின் வளர்ச்சியில் திரையிசை:

லய வாத்தியங்களின் வளர்ச்சியில் திரையிசை பெரும் பங்கு வகிக்கிறது. புதிய லய கருவிகளை புதிய பரிமாணத்தில் நல்ல தரமான ஒலியமைப்புடன் கேட்பதற்க்கு இனிமையாக்கி அடித்தட்டு
மக்கள் வரை கொண்டு சேர்ப்பதில் திரையிசை மிக முக்கிய பங்காற்றுகிறது. தோல் கருவிகளை

இசைத்துக்கொண்டிருந்த திரை இசை இன்று தோல் கருவிகளை மின்னணு கருவிகளாக வளர்ச்சி அடைந்து உலகை ஆட்டிப்படைத்துக்கொண்டு இருக்கிறது. பலவகையான தாளக்கருவிகளை ஒரே கருவியாகவும், ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு மிகவும் எளிதாகவும் லய வாத்திய கருவிகள் மாறியது இசைக்கருவிகளில் லய வாத்திய கருவியின் வளர்ச்சியில் ஒரு மிகப்பெரிய மைல் கல்லாகும்.

இசை நிகழ்ச்சிகளை உள்ளூரில் நடத்தியது மட்டும் இல்லாமல் வெளி நாடுகளுக்கும் சென்று நமது இசைக்கருவிகளை அங்கு அறிமுகப்படுத்தி , அங்கு பயன்படுத்திவரும் அவர்களின் பாரம்பரிய லய இசைக்கருவிகளை இசைக்க கற்றுக்கொண்டு நமது நாட்டில் அறிமுகப்படுத்துவதும் லய வாத்திய இசைக்கருவிகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.

5. **முடிவுரை:**

பண்டைய காலத்தில் மண்ணில் மிருதங்கம் செய்யப்பட்டு பிறகு தற்போது பலா மரம் கருங்காலி மரம் போன்ற இன்னும் வேறு சில மரங்களாலும் செய்யப்படுகிறது ,. இன்னும் அனைவருக்கும் தெரியாத பலவகையான தொன்மையான நமது பாரம்பரிய லய வாத்திய இசைக்கருவிகள் இன்றும் உள்ளன. அவை எங்கோ ஒரு மூலையில் மிகவும் சிலரால் பாரம்பரிய முறைப்படி இசைக்கப்படுகின்றன. அவ்வாறான இசை கருவிகளை இனம் கண்டு எதிர்கால சந்ததியினர் அந்த இசைக்கருவிகளை பற்றி அறிந்து கொள்ளவும் அந்த இசை கருவிகளை பழமை மாறாமல் இன்னும் எளிதாக்கி லய வாத்திய கருவிகளை சம்மந்தப்தப்பட்ட துறைகள் இன்னும் வளர்ச்சி பெற செய்து அழியாமல் காக்க பாடுபட வேண்டும்.

**நூல் பட்டியல்:**

1. திருக்கோவில் நுண் கலைகள் - டாக்டர்.கே.ஏ. பக்கிரிசாமி பாரதி.

2. மூவர் தேவாரத்தில் இசைக்கருவிகள்.-
கலைமாமணி முனைவர்.சுரேஷ் சிவன்.

3. தாளக்கருவூலம் – டாக்டர் கே.ஏ. பக்கிரிசாமி பாரதி.